**THE LABOUR COURT, SALEM**
**I.D.No.121 Of 2019**

<u>05.08.2024</u>

**PW1 – திரு. ஏழுமலை**

குறுக்கு விசாரணை தொடர்ச்சி– (2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் )

Ex.W3 எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2013 ம் வருடம் டேங் ஆப்ரேட்டர் வேலை செய்து வந்தேன். நான் என்னுடைய வேலையை எந்த தவறும் செய்யாமல் நன்றாக செய்து வந்தேன். நான் சரியாக தண்ணீர் திறந்துவிட்டு சரியாக வேலை செய்து வந்தேன் என்பதை காண்பிப்பதற்காக ஊர் மக்களிடம் கையெழுத்து வாங்கி Ex.W3 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். Ex.W3 ஆவணத்தின் அசலை முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு அனுப்பியுள்ளேன். அவ்வாறு அனுப்பியதற்கான ஒப்புகை எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. Ex.W3 ஆவணத்தில் எனக்கு யார் வேலை கொடுக்கிறார்கள், நான் யாரிடம் வேலை பார்க்கிறேன் என்ற விபரங்கள் இல்லை என்றால், நான் ஒப்பந்ததாரரிடம் வேலை செய்த விபரங்கள் உள்ளது. Ex.W4 ஆவணம் என்னுடைய ஒப்பந்ததாரரிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

Ex.W5 ஆவணத்தின்படி மாவட்ட கலெக்டரிடம் மனு கொடுத்து ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுள்ளேன் என்றால் சரிதான். Ex.W6 முதல் Ex.W12 வரையான ஆவணங்கள் அனைத்தையும் ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கான ஊதியத்தை ஒப்பந்ததாரர்தான் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தமிழ்நாடு குடிகால் வாரியத்திலிருந்து நான் வேலையில் சேருவது சம்பந்தமாக

வேலை நீக்கம் செய்யப்பட்டது சம்பந்தமாக எழுத்துமூலமான உத்தரவு எதுவும் வரவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சேலம் தொழிலாளர் உதவி ஆணையர் சமரசம் முன்பு மனு கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். அங்கு குடிநீர் வடிகால் வாரியம் சம்பந்தமாக ஆஜராகி பதில் கொடுத்திருந்தார்கள் என்றால், நான்தான் பதில் கொடுத்தேன் அவர்கள் வரவில்லை. Ex.W15 சமரச முறிவறிக்கையில் 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்ததாக குறிபிட்டுள்ளார்கள் என்றால், சரியல்ல. நான் வேண்டுமென்றே 2ம எதிர்மனுதாரர் ஆஜராகவில்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் 2,3 எதிர்மனுதாரர்களின் நேரடி பணியாளர் அல்ல என்பதால் எந்தவித பரிகாரமும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய தொழிற்தாவா மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.